# 34 வது
# ஆண்டறிக்கை
# 2023-2024



திருத்தந்தை
**பிரான்சிஸ்**



மக்கள் ஆயர்
**அ. நீதிநாதன்**



ஆண்டவரின் கருணையில்......

# அற்புதமான ஐந்தாண்டுகள்!!!

# 34 வது ஆண்டறிக்கை

**[01.04.2023 முதல் 31.03.2024 வரை]**

## முன்னுரை:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990 ஆம் ஆண்டு அரசின் சமூக சங்கங்களின் சட்டவிதிகளின்படி முறையாக பதிவு செய்யப்பட்டு கடந்த 34 ஆண்டுகளாக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய மக்கள் மற்றும் மாற்றுத் திறனாளர்களின் வாழ்க்கை மேம்பாடு அடைய பல்வேறு சமூகப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மேலும் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள சமூகத்தில் மிகவும் நலிவடைந்த மக்கள் மற்றும் தலித் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகவும், அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சியோடு வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு 2 **மாவட்டங்கள் 10 ஒன்றியங்கள், 111 ஊராட்சிகள், 153 குக் கிராமங்கள், 583 மகளிர் குழுக்கள், 76 மாற்றுத்திறனாளி குழுக்கள் என 7587 மகளிர்குழு உறுப்பினர்களையும் 985 மாற்றுத்திறனாளி குழு உறுப்பினர்களையும் சிறப்பாக வழிநடத்தி வருகின்றது.** மேலும் இவர்களுக்கு வாழ்வாதார பயிற்சி, கல்வி மேம்பாட்டு பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, அரசியல் பங்கேற்பு பயிற்சி, தனிநபர் மேம்பாட்டு பயிற்சி, வருமான பெருக்குத்திட்ட பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளையும் அளித்து ஊக்குவித்து தொடர்ந்து வழிகாட்டியும் வருகின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் மாதம் 2023 முதல் மார்ச் மாதம் 2024 வரையிலான பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் பற்றிய விரிவான அறிக்கையினை உங்கள் அனைவரின் முன் சமர்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## குறிக்கோள்:

**தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சி**

## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளங்கள்:

**மாவட்டங்கள் : செங்கல்பட்டு, காஞ்சிபுரம்**

**ஒன்றியங்கள் :**

- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- காஞ்சிபுரம்
- வாலாஜாபாத்
- உத்திரமேரூர்
- அச்சிறுப்பாக்கம்
- காட்டாங்கொளத்தூர்
- இலத்தூர்
- சித்தாமூர்
- மதுராந்தகம்

**விருதுவாக்கு:**

## நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்கிட...



காரிதாஸ் இந்தியா **மண்டல மேலாளர் முனைவர். ஜான் ஆரோக்கியராஜ்** அவர்களிடம் குடியிருப்புகளை இழந்த பழங்குடியின மக்கள் தங்களின் நிலையை எடுத்துக்கூறி உதவியை நாடியபோது காரிதாஸ் இந்தியா மூலமாக 29 குடும்பங்களுக்கும் ரூ.25,000 கொண்டு புதிய வீடு அமைத்துத்தர முடிவெடுக்கப்பட்டு வீட்டிற்கான வரைபடம் தயார்செய்யப்பட்டு வீடுகட்டும் பணிகள் நடைப்பெற்று முடியும் தருவாயில் உள்ளது. மிக விரைவில் முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும்.

## 2.கோல்பிங் இந்தியா திட்டம்:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான "கோல்பிங் இயக்கம்" செயல்பட்டு வருகின்றது. கடந்த 20 அண்டுகளில் நமது மறைமாவட்டத்திலுள்ள 43 பங்குகளில் 80 கோல்பிங் குழுக்கள் (இஸ்லாமியர், சிறுபான்மையினர் சகோதர சகோதரிகளையும் உள்ளடக்கிய) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் 1130 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் வழியாக கடந்த 20 ஆண்டுகளில் கோல்பிங் உறுப்பினர்கள் தங்களின் குடும்பம் மற்றும் தனிநபர் வருவாயை பெருக்குவதற்கு இவ்வாண்டு 1389 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுள்ளனர். இதுவரை அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.1,14,83,850.00 ஆகும்.

### குறிக்கோள்:

கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும், தகுதிவாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

### நோக்கம்:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் அன்மீகத்தோடு இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

### கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்:

- வருவாய் பெருக்குத்திட்டம் (Income Generation Programme)
- கூட்டுவருவாய் பெருக்குத்திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத்திட்டம் (Milch Animal Programme)
- வீடுகட்டும் திட்டம் (Housing Support Programme)
- தொழிற்பயிற்சி கல்வித்திட்டம் (Vocational Training Programme)
- தனிநபர் கழிவறைத்திட்டம் (Individual Toilet Programme)








# சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- **காரிதாஸ் இந்தியா – தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கான நிவாரண திட்டம்** - (Humanitatrian Assistance to Vulnerable and excluded communities impacted by flooding in Tamilnadu)
- **கோல்பிங் இந்தியா திட்டம் –** (Kolping India)
- **புதிய கண்ணோட்டம் –** (New Thrust)
- **நாபின்ஸ் நுண்கடன் திட்டம் –** (Nabfins)
- **சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் –** (Community Based Rehablitation)
- **காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு திட்டம் -** (Cancer Awareness)
- **பெண்கள் கூட்டமைப்பு** (Women Federation)

## 1. காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம் - (Caritas India-CMDRR)

காரிதாஸ் இந்தியா - தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கான நிவாரண திட்டம் (Humanitatrian Assistance to Vulnerable and excluded communities impacted by flooding in Tamilnadu) காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த நவம்பர் மாதம் பெய்த கனமழையால் கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு விளிம்புநிலை மக்களான பழங்குடியினரின் குடியிருப்புகள் அதிகளவில் சேதமடைந்தன. ஏரிகள், நீர்நிலைகள் அதிகளவில் உள்ள மாவட்டங்களான செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒரகடம், முத்துவேடு மற்றும் ஏனாத்தூர் ஆகிய கிராமங்களில் பழங்குடியினர் அதிகம் வசித்துவரும் பகுதிகள் ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கில் பாதிப்படைந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்ள காரிதாஸ் இந்தியா முன்வந்து பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை புதுப்பிக்கவும், புதியதாக வீடுகளை கட்டித்தரவும் திட்டமிட்டு (காரிதாஸ் இந்தியா தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கான நிவாரண திட்டத்தினை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது.

**பட்டியலின மக்களுக்கான வீடுகள் கட்டும் திட்டம்:**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தில் ஒரகடம் ஊராட்சியிலுள்ள ஒரகடம் கிராமத்தின் மலையடிவாரத்தில் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 29 குடும்பங்கள் காலம்காலமாக வசித்து வந்தனர். கடந்த ஆண்டு அரசின் கட்டுபாட்டுக்குட்பட்ட மலைப்பகுதிகள், எரிக்கரை வசிப்பிடங்களை அரசு கையகப்படுத்தும்போது ஒரகடம் பகுதியிலுள்ள மலையை சுற்றியுள்ள குடியருப்புகளை அரசு அப்புறப்படுத்தி 29 பழங்குடியின குடும்பங்களுக்கு ஒரகடம் கிராமத்தில் மாற்றுமனைகள் (பட்டாநிலம்) தலா 2.5 செண்ட் வழங்கப்பட்டது. இச்சூழலில் காரிதாஸ் இந்தியாவின் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான களப்பார்வையின்போது

## கோல்பிங் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டம்:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான "கோல்பிங் இயக்கம்" செயல்பட்டு வருகின்றது. கடந்த 20 அண்டுகளில் நமது மறைமாவட்டத்திலுள்ள 43 பங்குகளில் 80 கோல்பிங் குழுக்கள் (இஸ்லாமியர், சிறுபான்மையினர் சகோதர சகோதரிகளையும் உள்ளடக்கிய) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் 1130 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் வழியாக கடந்த 20 ஆண்டுகளில் கோல்பிங் உறுப்பினர்கள் தங்களின் குடும்பம் மற்றும் தனிநபர் வருவாயை பெருக்குவதற்கு இவ்வாண்டு 1389 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுள்ளனர். இதுவரை அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.1,14,83,850.00 ஆகும்.

| வ.எண் | மாவட்டம் | ஒன்றியம் | ஊராட்சி |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஆலத்தூர் |
| 2 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஒரகடம் |
| 3 | செங்கல்பட்டு | அச்சிறுப்பாக்கம் | கடலூர் |
| 4 | செங்கல்பட்டு | மதுராந்தகம் | விழுதமங்களம் |
| 5 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | முத்துவேடு |
| 6 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | வையாவூர் |
| 7 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | மருதம் |

### கடந்த ஓராண்டில் திட்ட கிராமங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகள்:

- தலைமைத்துவ பயிற்சி
- பதிவேடு பராமரிப்பு பயிற்சி
- சுகாதார விழிப்புணர்வு பயிற்சி
- தொழில்முனைவோர் பயிற்சி
- சுற்றுச்சூழல் மேலாண்மை பயிற்சி
- வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சி


Protection of Environment










KOLPING INDIA


KOLPING

## கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்:

- கோல்பிங் இயக்கத்தின் வழியாக பங்கு மற்றும் கிராம அளவில் மக்கள் குழுக்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.
- தொடர் சேமிப்பு செய்கின்றனர்
- சமூக ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகின்றனர்.
- ஆன்மீக பணிகளில் ஈடுபாடு கொள்கின்றனர்.
- சிறந்த குடிமக்களாக சமூகத்தில் வாழ ஊக்கம்பெற்று வருகின்றனர்.
- ஆரோக்கியமாக வாழவேண்டிய வழிமுறைகளை கையாளுகின்றனர்.
- திட்டப்பயிற்சிகளில் பங்கேற்பதால் தனிநபர், குடும்பம், குழுக்களாக இணைந்து கிராமங்களில் உள்ள இன்றைய சூழலை அறிந்துக்கொள்கின்றனர்.

## சமூக நல்லிணக்க செயல்பாடுகள்:

கோல்பிங் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்துக்காட்டுவதற்கு பங்குத்தளங்கள் மற்றும் கிளைப்பங்குகளில் உள்ள பல்வேறு பொதுசேவை பணிகளில் பங்கு பணியாளர்களுடன் தன்னார்வமுடன் ஈடுபட்டு பணிசெய்து வருவது போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது.

தங்கள் கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார தேவைகளை அறிந்து உதவும் பணிகளை கோல்பிங் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

நலிந்தோருக்கு உதவுதல், முதியோர் இல்லம் சந்திப்பு, ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், ஆதரவற்று இறக்கும் விசுவாசிகளை நல்லடக்கம் செய்தல், நோய்வாய்ப்பட்டோருக்காக ஜெபித்தல், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை தூய்மைபடுத்துதல் போன்ற பணிகளை கோல்பிங் இயக்கங்கள் சிறப்பாக செய்து வருகின்றன.

## பொருளாதார செயல்பாடுகள்:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி ஒருமித்த கருத்துடன் செயல்பட்டு கல்வி, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்ற செயல்பாடுகளில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் ரூ.1000 வரை சேமிக்கின்றனர். வங்கிகளில் கூட்டுக்கணக்கு துவங்கி நிதியினை பராமரிக்கவும், குழு உறுப்பினர்களின் தேவைக்கு உள்கடன் வழங்கி தங்கள் தேவைகளை பூர்த்திசெய்தும் வருகின்றனர். நல்லடக்கம் செய்தல், நோய்வாய்ப்பட்டோருக்காக ஜெபித்தல், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை தூய்மைபடுத்துதல் போன்ற பணிகளை கோல்பிங் இயக்கங்கள் சிறப்பாக செய்து வருகின்றன.

## கோல்பிங் இறப்பு நிதி:

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்துக்கள் காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்புநிதி வழியாக ரூ.5000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் வழியாக இவ்வாண்டு பயன்பெற்றவரின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பங்கு/கிராமம் | குழு பெயர் | பயனாளி | தொகை |
|---|---|---|---|---|
| 1 | ஓரகடம் | டாக்டர் அம்பேத்கர் கோல்பிங் குழு | ே.ரோஸ் | ரூ.5000.00 |

## கோல்பிங் இந்தியா திட்டத்தின் வழியாக கடன் பெற்றவர்களின் விவரம்:

| வ. எண் | பங்கு/ கிராமம் | குழு பெயர் | பயனாளி | கடன் திட்டம் | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | பல்லாவரம் | புனித தெரேசா கோல்பிங் குழு | மரியகாந்தி | வீடு | 50000.00 |
| 2 | மாமல்லபுரம் | திருக்குடும்பம் கோல்பிங் குழு | கார்மேல் | வீடு | 50,000.00 |
| 3 | கழுணிப்பாக்கம் | அப்துல்கலாம் கோல்பிங் குழு | நீலா | வீடு | 50,000.00 |
| 4 | ஓரகடம் | கன்னியம்மன் கோல்பிங் குழு | பச்சையம்மாள் | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 5 | ஓரகடம் | கன்னியம்மன் கோல்பிங் குழு | ஏழுமலை | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 6 | ஓரகடம் | கன்னியம்மன் கோல்பிங் குழு | வள்ளி | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 7 | ஆலத்தூர் | குயின் கோல்பிங் குழு | லில்லி அந்தோணியம்மாள் | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 8 | அந்தோணியார் நகர் | லீலிமலர் கோல்பிங் குழு | அந்தோணியம்மாள் | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 9 | அந்தோணியார் நகர் | வானவில் கோல்பிங் குழு | வனிதா | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 10 | கே.கே புதூர் | அம்பேத்கார் கோல்பிங் குழு | கரோலின் | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 11 | கே.கே புதூர் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | கன்னிமேரி | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 12 | ஓரகடம் | சகாயமாதா கோல்பிங் குழு | சுந்தரம் | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 13 | ஓரகடம் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | இந்திராணி | ஆடு/கறவைமாடு | 10,000.00 |
| 14 | ஓரகடம் | சகாயமாதா கோல்பிங் குழு | பாத்திமா | கழிவறை | 15,000.00 |
| 15 | ஓரகடம் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | சரஸ்வதி | கழிவறை | 15,000.00 |
| 16 | ஓரகடம் | லூர்துமாதா கோல்பிங் குழு | செல்வி | கழிவறை | 15,000.00 |
| 17 | அந்தோணியார் நகர் | லீலிமலர் கோல்பிங் குழு | ஜெபமாலை | கழிவறை | 15,000.00 |
| 18 | அந்தோணியார் நகர் | வானவில் கோல்பிங் குழு | சவுரியம்மாள் | கழிவறை | 15,000.00 |
| 19 | மாமல்லபுரம் | திருக்குடும்பம் கோல்பிங் குழு | சாந்தா | கழிவறை | 15,000.00 |
| 20 | மாமல்லபுரம் | திருக்குடும்பம் கோல்பிங் குழு | பரிமளா | கழிவறை | 15,000.00 |
| 21 | கே.கே புதூர் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | க்ஷோபனா | கழிவறை | 15,000.00 |
| 22 | கே.கே புதூர் | அம்பேத்கார் கோல்பிங் குழு | மோட்சராக்கினி | கழிவறை | 15,000.00 |
| 23 | ஆலத்தூர் | குயின் கோல்பிங் குழு | ராணி | கழிவறை | 15,000.00 |
| | | | | மொத்தம் | 4,00,000.00 |

## குழு சுழல்நிதி தொழிற்கடன் பெற்றவர்கள்:

| வ.எண் | பங்கு | கிராமம் | குழுவின் பெயர் | கடன் தொகை |
|---|---|---|---|---|
| 1 | முத்துவேடு | முத்துவேடு | குடும்பம் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 2 | திம்மசமுத்திரம் | கன்னடியன்குட்டை | சவேரியார் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 3 | வேடந்தாங்கல் | வளையபுத்தூர் | பறவைகள் சரணாலயம் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 4 | பெருங்கோழி | பெருங்கோழி | சூசையப்பர் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 5 | பெருங்கோழி | பெருங்கோழி | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 6 | திருக்கழுக்குன்றம் | திருக்கழுக்குன்றம் | சகாயமாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 7 | பாலூர் | மேல்மணப்பாக்கம் | சிகரம் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 8 | அம்மையப்பநல்லூர் | சகாயபுரம் | வனத்து சின்னப்பர் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| மொத்தம் | | | | 8,00,000.00 |






## சிறப்பு செயல்பாடுகள்:

### சுற்றுச்சூழல் மேலாண்மை விழிப்புணர்வு பேரணி:

16.09.2023 அன்று சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பேரணி மற்றும் பொதுக்கூட்டம் ஒரகடம் கிராமத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட கிராம பொதுமக்கள், கோல்பிங் குழு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர். இப்பேரணியில் ஊராட்சி மன்ற தலைவர் திரு.ஜெயராமன் மற்றும் வார்டு கவுன்சிலர்கள், மக்கள்நலப்பணியாளர்கள், ஊரக வேலைவாய்ப்பு மேற்பார்வையாளர்கள் என சிறப்புவிருந்தினர்கள் கலந்துக்கொண்டு பேரணியாக ஊராட்சி முழுவதும் சென்று பொதுமக்களுக்கு சுற்றுசூழல் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டனர்.












KOLPING INDIA




KOLPING INDIA

## உணவக மேலாண்மை சமையற்கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்ப பயிலக பயிற்சி:

இந்திய அரசின் சுற்றுலாத்துறை மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் இணைந்து வழங்கும் உணவக மேலாண்மை சமையற்கலை மற்றும் ஊட்டநெறி தொழில்நுட்ப பயிலக பயிற்சியானது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 2 மாவட்டங்களில், 10 ஒன்றியங்களில் கிராமப்புறங்களில் உள்ள மகளிர் குழுவில் உள்ள 50 வயதிற்குட்பட்ட தொழில்செய்யும் ஆர்வமுடைய 45 நபர்களை கண்டறிந்து அவர்களுக்கான 6 நாள் ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சியளிக்கபட்டு பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வாறு கடந்த ஜீன் மாதம் முதல் செப்டம்பர் வரை ஒன்றியங்கள் வாரியாக பயிற்சி பெற்றவர்கள் பட்டியல் விவரம்:

| வ. எண் | தேதி | | ஒன்றியம் பகுதி 1 | ஒன்றியம் பகுதி 2 | இடம்1 | இடம் 2 | பயிற்சி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|
| | துவக்கம் | முடிவு | | | | | |
| 1 | 26.06.23 | 01.07.23 | திருப்போரூர் | திருப்போரூர் | ஒரகடம் | ஒரகடம் | 90 |
| 2 | 03.07.23 | 08.07.23 | மதுராந்தகம் | அச்சிறுப்பாக்கம் | கே.கே.புதூர் | நேமம் | 90 |
| 3 | 10.07.23 | 15.07.23 | கடற்கரை | கடற்கரை | கடலூர் பெரியகுப்பம் | தழுதாளிகுப்பம் | 90 |
| 4 | 17.07.23 | 22.07.23 | கட்டாங்குளத்தூர் | காட்டாங்குளத்தூர் | பாலூர் | மேல்மணப்பாக்கம் | 90 |
| 5 | 24.07.23 | 29.07.23 | மதுராந்தகம் | மதுராந்தகம் | சீர்வாடி | தச்சூர் | 90 |
| 6 | 31.07.23 | 05.08.23 | திருக்கழுக்குன்றம் | திருக்கழுக்குன்றம் | எடையூர் | பாண்டூர் கொல்லமேடு | 90 |
| 7 | 06.11.23 | 11.01.23 | திருப்போரூர் | திருப்போரூர் | கேளம்பாக்கம் | கேளம்பாக்கம் | 90 |
| 8 | 20.11.23 | 25.11.23 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | அம்மையப்ப நல்லூர் | ஆர்.என்.கண்டிகை | 90 |
| 9 | 07.12.23 | 12.12.23 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | நல்லூர் | உத்திரமேரூர் | 90 |
| 10 | 25.12.23 | 30.12.23 | திருப்போரூர் | திருப்போரூர் | பெரிய விப்பேடு | பெரிய விப்பேடு | 90 |
| 11 | 01.01.24 | 06.01.24 | வாலாஜாபாத் | வாலாஜாபாத் | வையாவூர் | வையாவூர் | 90 |
| 12 | 08.01.24 | 13.01.24 | மதுராந்தகம் | மதுராந்தகம் | கீழ்ப்பட்டு | விழுதமங்களம் | 90 |
| 13 | 11.03.24 | 16.03.24 | இலத்தூர் | இலத்தூர் | உடல்கார குப்பம் | குண்டுமணிசேரி | 90 |
| 14 | 11.03.24 | 16.03.24 | திருக்கழுக்குன்றம் | திருக்கழுக்குன்றம் | புலியூர் | வீரகுப்பம் | 90 |
| 15 | 18.03.24 | 23.03.24 | திருக்கழுக்குன்றம் | இலத்தூர் | ஆயப்பாக்கம் | குண்டுமணிச்சேரி | 90 |
| 16 | 18.03.24 | 23.03.24 | இலத்தூர் | இலத்தூர் | பரமேஸ்வர மங்களம் | பரமேஸ்வர மங்களம் | 90 |
| 17 | 25.03.24 | 30.03.24 | வாலாஜாபாத் | வாலாஜாபாத் | ஏனாத்தூர் | ஏனாத்தூர் | 90 |
| 18 | 25.03.24 | 30.03.24 | காஞ்சிபுரம் | - | காஞ்சிபுரம் | - | 50 |
| **பயிற்சி பெற்ற மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை** | | | | | | | **1580** |

# 3.புதிய கண்ணோட்டம் : (New Thrust)

புதிய கண்ணோட்டத் திட்டபணியானது தமிழக சமூகப்பணி மையம் (Tasoss - Trichy) நிறுவன வழிகாட்டுதலுடன் கடந்த 23 ஆண்டுகளாக 7 கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 6 வது கட்டத்தின் திட்ட பணிகள் மூலம் இலக்கு மக்கள் உரிமை சார்ந்த பிரச்சனைகள், வாழ்வாதாரம், குழந்தைகள் பாராளுமன்றம் துவங்குதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட அளவில் கடந்த 23 ஆண்டுகளாக பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் தொடர்செயல்பாடாக புதிய கண்ணோட்ட திட்ட 7வது கட்ட பணியானது 2021 ஜீன் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான கீழ்கண்ட திட்ட செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.





## புதிய கண்ணோட்ட திட்டம் – 7 ஆம் கட்டம் (நமது கிராமம் நமது முன்னேற்றம்)

நோக்கம்:

நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்கின் அடிப்படையில் முழு கிராம வளர்ச்சி நிலையை உருவாக்குதல்

கிராம வளர்ச்சி:

☒ கிராமப்புறங்களில் வாழும் மக்கள் சமூக, பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைதல்.

☒ வறுமை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, சமத்துவம் அகியவற்றில் மேம்பாடு அடைதல்.

☒ அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், வீட்டுவசதி, குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் மேம்பாடு அடைதல்.

☒ அனைவருக்கும் சமமான மனித திறமைகளை உயர்த்தும் மாற்றுநிலை

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளமாகிய காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், கருவேப்பம்பூண்டி கிராம ஊராட்சி புதிய கண்ணோட்ட திட்ட பணிக்கான இலக்கு கிராமமாக தேர்வு செய்யப்பட்டு முறையாக திருச்சி டாசோஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பாடுகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- திட்ட ஊராட்சி
- திட்ட செயல்பாடுகள், பயிற்சிகள்
- வாழ்வாதாரப் பணிகள்
- கிராம வளர்ச்சி பணிகள்
- குழந்தைகள் பாராளுமன்றம்

## 1. திட்ட ஊராட்சி

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், கருவேப்பம்பூண்டி ஊராட்சியில் அடங்கிய 3 கிராமங்களில் டாசோஸின் புதிய கண்ணோட்ட திட்டத்தின் 7-வது கட்ட செயல்பாடுகள் 2021 முதல் 2024 மே மாதம் வரை மேற்கண்ட ஊராட்சியில் நடைமுறையில் உள்ளது.

## 2. திட்ட செயல்பாடுகள், கிராமவளர்ச்சி பணிகள்

- கிராம வளர்ச்சி பணிகள் கிராம ஊராட்சி நிர்வாகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2023 மே 01 மற்றும் ஆகஸ்டு - 15 ஆகிய தேதிகளில் கிராம சபா கூட்டங்களில் பங்கேற்று கிராம வளர்ச்சி பணிகளான அடிப்படை குடிநீர், பொது சுகாதாரம், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் வேலைவாய்ப்புகள், கல்வி, தெரு விளக்குகள், சிமெண்ட் சாலைகள், அங்கன்வாடி, மகளிர் கட்டிடம், பொது நூலகங்கள், ஆகியவற்றின் வளர்ச்சி பணிகளை நிறைவேற்றுவதில் மக்கள் அமைப்புடன் இணைந்து (ஊடீமுள) மனுக்கள் அளிக்கப்பட்டு கீழ்க்கண்ட செயல்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மகளிர் ீடுகு கட்டிடம், அங்கன்வாடி, சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது.
- கருவேப்பம்பூண்டி முதல் மடம் வரை தார்சாலை மறுசீரமைப்பு
- ஊராட்சி அலுவலகம் முதல் பொண்ணிடம் சாலை வரை 800 மைல் சிமெண்ட் சாலை, கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.
- புதிய ரேசன் கடை கட்டப்பட்டுள்ளது.
- தற்போது புதிய நூலக கட்டிடம் வேண்டி கிராம சபாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## 3. வாழ்வாதாரப்பணிகள்

புதிய கண்ணோட்டத் திட்டத்தில் மக்கள் அமைப்பினர் இணைந்து வாழ்வாதாரத்தில் மாற்றம் காண்பதை முக்கிய இலக்காக கொண்டு இத்திட்டம் பயணிக்கின்றது.

- தனிநபராகவும், குழுவாகவும் இணைந்து சிறுதானியங்கள், மதிப்புக்கூட்டு பொருட்கள், தேனிர் கடை, அழகு நிலையம், காய்கறி வியாபாரம் போன்ற வாழ்வாதாரத்திற்கான பயிற்சிகள் திட்ட கிராமங்களில் அளிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் தனிநபர் மற்றும் குழுக்களாக இணைந்து சிறு தொழில் செய்து பயன்பெற்று வருகின்றனர். திட்டத்தின் வாழ்வாதார பயிற்சிகளில் கலந்துக்கொண்டு திருக்கழுக்குன்றம் ஒன்றியம் பட்டிக்க-ாடு ஊராட்சி புலியூர் கிராமத்திலுள்ள பெண்கள் ீடுகுஆக இணைந்து (குநனநசயவழைஎ) அரிசி வியாபாரம் செய்து வருகின்றார்கள்.

## 4. குழந்தைகள் பாராளுமன்றம்

திட்ட கிராமங்களில் உள்ள குழந்தைகளை ஒன்றிணைத்து 30 குழந்தைகள் பாராளுமன்றம் தற்போது செயல்பாட்டில் உள்ளது. இக்குழுவின் மூலம் குழந்தைகளுக்கான கல்வி, சட்டம் மற்றும் உரிமை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது இவ்வாண்டு மேலும் 10 புதிய குழந்தைகள் பாராளுமன்ற குழுக்கள் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | பெயர் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | நல்லூர் | டாக்டர்.அம்பேத்கார் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 நபர்கள் |
| 2 | உத்திரமேரூர் | ஓங்கூர் | நேரு குழந்தைகள் பாராளுமன்றம் | 12 நபர்கள் |
| 3 | வாலாஜாபாத் | வாரணவாசி | வீரம் குழந்தைகள் பாராளுமன்றம் | 8 நபர்கள் |
| 4 | வாலாஜாபாத் | வாரணவாசி | மகாத்மாகாந்தி குழந்தைகள் பாராளுமன்றம் | 10 நபர்கள் |
| 5 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | டாக்டர்.நீதிநாதன் குழந்தைகள் பாராளுமன்றம் | 15 நபர்கள் |
| 6 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | டாக்டர்.அம்பேத்கார் குழந்தைகள் பாராளுமன்றம் | 15 நபர்கள் |
| 7 | உத்திரமேரூர் | பெருங்கோழி | டாக்டர்.அம்பேத்கார் குழந்தைகள் பாராளுமன்றம் | 12 நபர்கள் |
| 8 | உத்திரமேரூர் | சகாயபுரம் | டாக்டர்.அம்பேத்கார் குழந்தைகள் பாராளுமன்றம் | 15 நபர்கள் |
| 9 | உத்திரமேரூர் | கருவேப்பம்பூண்டி | டாக்டர்.அம்பேத்கார் குழந்தைகள் பாராளுமன்றம் | 16 நபர்கள் |
| 10 | திருக்கழுக்குன்றம் | ஆயப்பாக்கம் | மலரும் மொட்டுக்கள் குழந்தைகள் பாராளுமன்றம் | 15 நபர்கள் |

## கிராம சபா பங்கேற்றல்:

மே 01, ஆகஸ்டு 15, அக்டோபர் 02, நவம்பர் 03, ஜனவரி 26 ஆகிய தேதிகளில் திட்ட ஊராட்சியான கருவேப்பம்பூண்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மக்கள் அமைப்புகள் கலந்துக்கொண்டு தங்களது அடிப்படைத் தேவைகளான சாலை, குடிநீர் வசதி, கழிவுநீர் கால்வாய், தனிநபர் கழிவறை, தொகுப்பு வீடு பெறுதல் ஆகியவற்றை குறித்து கிராமசபை கூட்டத்தில் மனுக்கள் கொடுக்கப்பட்டு அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுகிறது.

**நாபின்ஸ் நுண்டன் திட்டம்: (Nabfins)**

நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது கடந்த 2017 ஆம் ஆண்டுமுதல் 7 ஆண்டுகளாக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு கடனுதவி வழங்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வழிகாட்டி வருகிறது. இக்கடனுதவித்தொகையானது மகளிர் குழுக்கள் மற்றும் குழுக்கள் அல்லாத கூட்டு பொறுப்பு குழு (JLG) உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில்செய்து வருமானத்தை பெருக்கிக்கொள்ளவும், விவசாயம் போன்ற உற்பத்தி செயல்பாடுகளை ஊக்குவித்து பெண்களை தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்கள் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தள கிராமங்களில் உள்ள கூட்டு பொறுப்புக்குழு உறுப்பினர்களுக்கு தொழில் நோக்கத்திற்காக கடந்த ஓராண்டில் நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தின் மூலம் ஒன்றியம் வாரியாக பெற்றுத்தரப்பட்ட கடனுதவித்தொகை மொத்தம் ரூ.4,00,20,000.00 (நான்கு கோடியே இருபதாயிரம்) ஆகும். விவரம் பின்வருமாறு:

## கடன் உதவித் தொகை பெற்றவர்களின் விவரம் :

| வ.எண் | ஒன்றியம் | குழுக்களின் எண்ணிக்கை | மொத்த கடன் கணக்குகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட கடன் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | 18 | 128 | 79,75,000.00 |
| 2 | வாலாஜாபாத் | 13 | 81 | 39,70,000.00 |
| 3 | காஞ்சிபுரம் | 15 | 90 | 59,50,000.00 |
| 4 | உத்திரமேரூர் | 12 | 52 | 26,95,000.00 |
| 5 | காட்டாங்கொளத்தூர் | 06 | 34 | 19,50,000.00 |
| 6 | திருக்கழுக்குன்றம் | 06 | 39 | 25,85,000.00 |
| 7 | அச்சிறுப்பாக்கம் | 17 | 92 | 56,85,000.00 |
| 8 | இலத்தூர் | 13 | 90 | 60,000,00.00 |
| 9 | சித்தாமூர் | 04 | 32 | 21,80,000.00 |
| 10 | மதுராந்தகம் | 03 | 16 | 10,30,000.00 |
| **மொத்தம்** | | **101** | **604** | **4,00,20,000.00** |

## 5.காரிதாஸ் இந்தியா – சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம்: (Community Based Rehablitation)

காரிதாஸ் இந்தியாவின் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் என்பது சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் உத்தி ஆகும். மாற்றுத்திறனாளிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பை உறுதி செய்தல், உள்ளூர் வளங்களைக் கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகளை அணுகுதல், மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள் மற்றும் சமூகம் உள்ளிட்ட உள்நாட்டில் உள்ள வளங்களை பயன்படுத்தி உடல், மன, சமூக மற்றும் தொழில்சார்ந்த திறமைகளை முழுமையாகப் பெறுவதற்கும், மாற்றுத்திறனாளிகளின் உடல்நலம், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சமூக சேவைகளில் கவனம் செலுத்தும் விரிவான மறுவாழ்வு சேவைகளே சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டமானது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் திருப்போரூர், வாலாஜாபாத் ஆகிய 2 ஒன்றியங்களிலும் 2 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 8 களப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 85 கிராமங்களில் உள்ள 21 வகையான 985 மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**நோக்கம்:**

ஒரு தனிமனிதனுக்கு சமுதாயத்தில் கிடைக்கும் அனைத்து உரிமைகளும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கிடைத்திட வழிவகை செய்தல்.

கருப்பொருள்:

- சுகாதாரம் (Health)
- கல்வி (Education)
- வேலைவாய்ப்பு (Livelihood)
- சமூகம் (Social)
- மேம்பாடு (Empowernment)

### சுகாதாரம் (Health)

சி.பி.ஆர் திட்டத்தின் மிக முக்கிய கூறுகளில் ஒன்றான சுகாதாரம், நோய்த்தடுப்பு, மருத்துவம் மற்றும் மருத்துவ பராமரிப்பு மூலம் மாற்றுத்திறனாளிகளின் ஆரோக்கியம், மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் மறுவாழ்வு பணிகள் மூலம் சுகாதார சேவைகளை சரியான முறையில் பயன்படுத்தி உடல்நல மேம்பாட்டை உறுதி செய்தல் ஆகும்.

மாற்றுத்திறனாளிகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஆதரவான நல்ல சூழலை ஏற்படுத்தித்தருதல், மருத்துவ சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமூகம் இணைந்து மாற்றுத்திறனாளிகளின் உடல் சார்ந்த மருத்துவ தேவைகளை பூர்த்திச்செய்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மூலம் மாற்றுத்திறனாளிகளின் நலன் பேணிக்காக்கப்படுகிறது. மேற்கண்ட சுகாதார தேவைகளைக் கொண்டு கடந்த ஓராண்டில் திட்ட கிராமங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு பெற்றுத்தரப்பட்ட சுகாதார நலன் சார்ந்த பணிகள் மற்றும் மருத்துவ உதவி உபகரணங்களின் விவரம் பின்வருமாறு:





மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட சுகாதார நலன் சார்ந்த பயிற்சிகள் மற்றும் மருத்துவ உதவி உபகரணங்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | சுகாதார பணிகள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாற்றுத்திறனாளி மருத்துவ சான்றிதழ் | 68 |
| 2 | மாற்றுத்திறனாளி தேசிய அடையாள அட்டை | 82 |
| 3 | பேச்சு (ம) உடலியக்க பயிற்சி | 23 |
| 4 | மனவளர்ச்சி குறைபாடுடையவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சி | 45 |
| 5 | காதொலிக் கருவி | 2 |
| 6 | ஊன்றுக்கோல் | 5 |
| 7 | சக்கர நாற்காலி | 5 |

## கல்வி (Education)

மாற்றுத்திறனாளி குழந்தைகள் சமூகத்தில் அவர்களுக்கான அடிப்படை கல்வியை பெறவும், கல்வி சார்ந்த தடைகளை தகர்த்து அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒருங்கிணைந்த கல்வியை அளிக்க முயற்சி செய்து முறையான (அ) முறைசாரா கல்வி மூலம் கல்வியை பரவலாக்கவும் பல்வேறு முயற்சிகள் சி.பி.ஆர் திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்டுள்ளது. அவையாவன,

- மாற்றுத்திறனாளி குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல்
- இடைநிற்றல் அற்ற கல்வியை உறுதி செய்தல்
- சிறப்பு ஆசிரியர்களைக் கொண்டு கல்வியளித்தல்
- பள்ளிகளில் தடைகளற்ற சூழலை ஏற்படுத்துதல்
- ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியை ஊக்குவித்தல்
- மாதிரி பள்ளிகளை உருவாக்குதல்
- மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆதரவு குழுக்களை ஊருவாக்கி உதவுதல்
- கிராம மற்றும் பள்ளிகளில் தன்னார்வலர்களை ஊக்குவித்து கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்

மேற்கண்ட செயல்பாடுகளின் மூலம் 85 திட்ட கிராமங்களில் உள்ள 36 மாற்றுத்திறனாளி குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு இடைநிற்றலின்றி கல்வி கற்று வருகின்றனர்.

## வாழ்வாதாரம் (Livelihood)

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் மிக உயர்ந்த குறிக்கோளான மாற்றுத்திறனாளிகள் சுயமாக வாழ தேவையான சூழலை உருவாக்கித் தருதலை மையமாகக் கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள், சுயதொழில் முறைகள், வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருதல், அரசின் வேலைவாய்ப்பு இடஒதுக்கீட்டை பெற வழிகாட்டுதல், வேலைவாய்ப்பில் முன்னுரிமை, வலைப்பின்னல் மூலம் சந்தைபடுத்துதல், அரசின் உதவித்தொகைகளை பெறுதல், அரசு திட்டங்களை பெறுதல், வங்கிக்கடன், தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை இணைத்து வருமானம் ஈட்ட வழிவகைகளை பெற்றுத்தருதல் போன்ற பணிகள் வாழ்வாதார மேம்பாட்டு பணிகளாக சி.பி.ஆர். திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## மிச்சாங் புயல் 2023 நிவாரண பணிகள்:

04.12.2023 அன்று தமிழகத்தில் ஏற்பட்ட மிச்சாங் புயல் மற்றும் வெள்ளத்தால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டது. புயல் மற்றும் மழைவெள்ளத்தின் தாக்கத்தை தொடர்ந்து காரிதாஸ் இந்தியாவின் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் மற்றும் எபிகோர் நிறுவனம் இணைந்து செங்கல்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை மேற்கொண்டது. இதில் திருப்போரூர் ஒன்றியத்தில் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், 461 நபர்களை கண்டறிந்து அவர்களுக்கான அவசரகால நிவாரண உதவி பொருட்கள் அடங்கிய (ரூ.158) கொண்ட தொகுப்பு (குளியல் சோப்பு, துணிசோப்பு, பேஸ்ட், பிரக்ஷ், நாப்கின்) உடனடியாக வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து திருப்போரூர் ஒன்றியத்திலுள்ள 32 கிராமங்களில் உள்ள 461 பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு புயல் நிவாரணத்தொகையாக ரூ.2000 அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. **புயல் நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட தொகை மொத்தம் ரூ.9,94,838.00 (ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து எண்ணூற்று முப்பத்து எட்டு)** ஆகும். கிராமங்கள் வாரியாக நிவாரண உதவித்தொகை பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பஞ்சாயத்து | கிராமம் | பயனாளிகள் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | செம்பாக்கம் | அச்சரவாக்கம் | 12 | 25,896.00 |
| 2 | ஆலத்தூர் | ஆலத்தூர் | 20 | 43,160.00 |
| 3 | மானாம்பதி | ஆமையாம்பட்டு | 02 | 04,316.00 |
| 4 | ஆமூர் | ஆமூர் | 20 | 43,160.00 |
| 5 | மானாம்பதி | ஆனந்தபுரம் | 04 | 08,632.00 |
| 6 | தண்டலம் | பாரதிநகர் | 20 | 43,160.00 |
| 7 | மானாம்பதி | சி.எஸ்.ஐ அகரம் | 02 | 04,316.00 |
| 8 | செம்பாக்கம் | காமராஜபுரம் | 09 | 19,422.00 |
| 9 | பையனூர் | கூத்தவாக்கம் | 07 | 15,106.00 |
| 10 | திருப்போரூர் | குமரன்நகர் | 14 | 30,212.00 |
| 11 | குன்னப்பட்டு | குன்னப்பட்டு | 12 | 25,896.00 |
| 12 | திருப்போரூர் | மலைக்கோவில் | 05 | 10,790.00 |
| 13 | மானாம்பதி | மானாம்பதி | 15 | 32,370.00 |
| 14 | திருப்போரூர் | எம்.ஜி.ஆர் நகர் | 08 | 17,264.00 |
| 15 | ஆமூர் | முந்திரித்தோப்பு | 09 | 19,422.00 |
| 16 | ஒரகடம் | ஒரகடம் | 55 | 01,18,690.00 |
| 17 | திருப்போரூர் | படவேட்டம்மன் கோவில் | 14 | 30,212.00 |
| 18 | பையனூர் | பையனூர் | 39 | 84,162.00 |
| 19 | குன்னபட்டு | பஞ்சந்திருத்தி | 07 | 15,106.00 |
| 20 | மானாம்பதி | பெரியார்நகர் | 04 | 08,632.00 |
| 21 | பையனூர் | பண்டிதமேடு | 09 | 19,422.00 |
| 22 | பெருந்தண்டலம் | பெருந்தண்டலம் | 03 | 06,474.00 |
| 23 | ஆமூர் | பொருந்தவாக்கம் | 08 | 17,264.00 |
| 24 | பெருந்தண்டலம் | ரெட்டிக்குப்பம் | 07 | 15,106.00 |
| 25 | மானாம்பதி | சந்தினாம்பட்டு | 04 | 08,632.00 |
| 26 | செம்பாக்கம் | செம்பாக்கம் | 35 | 75,530.00 |
| 27 | சிறுங்குன்றம் | சிறுங்குன்றம் | 30 | 64,740.00 |
| 28 | சிறுதாவூர் | சிறுதாவூர் | 43 | 92,794.00 |
| 29 | தண்டலம் | தண்டலம் | 10 | 21,580.00 |
| 30 | பெருந்தண்டலம் | வளர்கன்றம் | 12 | 25,896.00 |
| 31 | காரணை | வளவந்தாங்கல் | 14 | 30,212.00 |
| 32 | ஆலத்தூர் | வெங்களேரி | 08 | 17,264.00 |
| **மொத்தம்** | | | **461** | **09,94,838.00** |

மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். மாற்றுத்திறனாளிகளை குறித்த சமூக கண்ணோட்டங்களை தகர்த்தல், சமுதாய சூழலை ஏற்று மாற்றுத்திறனாளிகளையும் சமூகத்தின் அங்கத்தினர்களாக மாற்றுதல், குடும்ப விழாக்கள், கிராம நிகழ்வுகள், கிராம சபை கூட்டங்களில் பங்கேற்பு, மாற்றுத்திறனாளிகளுக்கான அரசின் சட்டங்களின் மூலம் அவர்களது உரிமை மற்றும் சலுகைகளை மீட்டெடுத்தல், சமூகத்தின் மக்களிடம் மனிதநேய பண்புகளை வளர்த்தல், போன்ற செயல்பாடுகளைக் கொண்டு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.











# மேம்பாடு (Empowernment)

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்ட பகுதிகளில் உள்ள 85 மாற்றுத்திறனாளி குழுக்களில் உள்ள 985 மாற்றுத்திறனாளிகள் ஒன்றியம் வாரியாக இணைந்து திருப்போரூர் ஒன்றிய மாற்றுத்திறனாளி கூட்டமைப்பு (விடியல்) (ம) வாலாஜாபாத் ஒன்றிய மாற்றுத்திறனாளி கூட்டமைப்பு (வெற்றிப்படிகள்) என இரு ஒன்றிய கூட்டமைப்பு உறுப்பினர்களாக இணைந்து மாற்றுத்திறனாளிகளின் தேவைகள், உரிமை சார்ந்த செயல்பாடுகளை தாங்களே முன்னெடுத்துச் செல்கின்றனர். தற்போது ஒன்றிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றிய கூட்டமைப்புகள் முறையாக வங்கி கணக்கு துவங்கப்பட்டு அரசின் பதிவிற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது.













## 6.காரிதாஸ் இந்தியாவின் – எழுவோம் இயக்கம் புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டம் (Cancer Awareness Programme)

காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் எனும் புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டம் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக 3 ஆண்டுகளாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. புற்றுநோய் காரணமாக இறப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் காரிதாஸ் இந்தியாவுடன் இணைந்து புற்றுநோயாளர்களுக்கான பாதிப்பை குறைக்கவும், புற்றுநோயற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள 18 கிராமங்களை தேர்ந்தெடுத்து கிராமப்புற மக்களிடையே புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம். இத்திட்டத்தின் தொடர்செயல்பாடாக புற்றுநோய் அடையாளப்படுத்துதல், மற்றும் மருத்துவ பரிசோதனைகளின் வாயிலாக முறையான தொடர் சிகிச்சை குறித்து கிராமப்புற மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.














## புற்றுநோய் விழிப்புணர்வு முகாம்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் சென்னை எஸ்.ஆர்.எம் மருத்துவமனையுடன் இணைந்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 251 நபர்கள் கலந்துக்கொண்டனர். இதில் புற்றுநோய் ஏற்படுவதற்கான காரணங்கள், உணவு பழக்கவழக்கங்கள், மருத்துவ பரிந்துரைகள், தடுக்கும் வழிமுறைகள் குறித்து தெளிவாக விளக்கப்பட்டது.

## 7. பெண்கள் கூட்டமைப்பு:

தமிழக சமூகப்பணி மையம் டாசோஸ் வழிகாட்டுதலுடன் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தற்போது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் இரண்டு மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்களைக்கொண்டு தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கங்கள் பெண்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்திற்காக துவங்கப்பட்டு 104 ஊராட்சிகளில் உள்ள 140 கிராமங்களில் 576 குழுக்களுடன் 7575 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

## காஞ்சிபுரம் மாவட்டம் பெண்கள் மேம்பாட்டுச் சங்கம்:

15.05.2023 அன்று சி.ஆர்.டி.எஸ் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டுவரும் காஞ்சிபுரம் மாவட்டம் பெண்கள் மேம்பாட்டுச் சங்கமானது அரசு சட்டவிதிகளின்படி பதிவு எண்: 11/23 முறையாக பதிவு செய்யப்பட்டது. இச்சங்கமானது 11 செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களுடன் இணைக்கப்பட்டு காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத் ஆகிய ஒன்றியங்களில் உள்ள குழுக்களுடன் இணைந்து ஒன்றிய அளவிலான குழுக்கூட்டம் நடத்துதல், அரசு திட்டங்களை பெறுதல், சிறுதொழில் செய்யும் குழுக்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில் தொடங்கும் குழுக்களுக்கான வங்கி நேரடிக்கடன், நாபின்ஸ் நிதி நிறுவனத்துடன் இணைந்து குழுக்களுக்கான பல்வேறு வளர்ச்சி பணிகளை முனைப்புடன் செய்து வருகின்றது.

## இயக்கத்தின் நோக்கம்:

- சமுதாய வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள, ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒன்றுபட்டு சமூக, பொருளாதார அரசியல், கல்வி, கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் முழு ஈடுபாடு கொண்டு வாழ்வில் முன்னேற துணைபுரிதல்.
- பெண்களிடையே கூட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பெண்களுக்கான உரிமைகளை பெறவும், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- சமூக பிரச்சினைகளின் அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்காக வழிவகுத்தல்.
- அரசு அதிகாரிகளுடன் சமூக உறவை ஏற்படுத்தி பெண்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுத்தருதல்.
- சமூகத்தில் நலிவுற்ற பெண்களின் நிலையை உயர்த்தவும், அரசியலிலும், நிர்வாக பொறுப்புகளிலும் பெண்கள் பங்கெடுக்கவும் கூட்டமைப்பு உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒத்த சிந்தனையுள்ள பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.

- அரசு வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் மூலம் நேரடிக்கடன் பெற்று சுயதொழில் செய்து பெண்களை வாழ்வாதாரத்தில் உயர்த்துதல்.
- பெண்களுக்கு பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிய செய்து பெண்களை சுயசார்பு நிலைக்கு உயர்த்துதல்.

## செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை | புதிய குழுக்கள் | உறுப்பினர் | மொத்த குழுக்கள் | மொத்த உறுப்பினர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | 14 | 15 | 70 | 866 | 6 | 78 | 76 | 944 |
| 2 | உத்திரமேரூர் | 15 | 25 | 81 | 1186 | 4 | 56 | 85 | 1242 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 10 | 14 | 47 | 645 | 0 | 0 | 47 | 645 |
| 4 | வாலாஜாபாத் | 6 | 16 | 50 | 623 | 6 | 74 | 56 | 697 |
| 5 | இலத்தூர் | 8 | 8 | 37 | 520 | 0 | 0 | 37 | 520 |
| 6 | மதுராந்தகம் | 6 | 7 | 36 | 547 | 0 | 0 | 36 | 547 |
| 7 | சித்தாமூர் | 7 | 7 | 19 | 269 | 5 | 78 | 24 | 347 |
| 8 | காஞ்சிபுரம் | 12 | 18 | 66 | 855 | 2 | 27 | 68 | 882 |
| 9 | திருக்கழுக்குன்றம் | 11 | 12 | 47 | 402 | 4 | 62 | 51 | 464 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 15 | 18 | 64 | 979 | 4 | 65 | 68 | 1044 |
| 11 | கடற்கரை பகுதி | 7 | 13 | 35 | 318 | 0 | 0 | 35 | 318 |
| மொத்தம் | | 111 | 153 | 552 | 7210 | 31 | 401 | 576 | 7587 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக ஒன்றியம் வாரியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | குழுக்கள் | கடன் தொகை |
|---|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | 6 | 74,00,000 |
| 2 | காஞ்சிபுரம் | 13 | 71,60,000 |
| 3 | திருப்போரூர் | 4 | 91,00,000 |
| 4 | வாலாஜாபாத் | 15 | 1,82,50,000 |
| 5 | இலத்தூர் | 3 | 30,00,000 |
| 6 | சித்தாமூர் | 4 | 82,44,500 |
| 7 | மதுராந்தகம் | 1 | 11,68,000 |
| 8 | அச்சிறுப்பாக்கம் | 14 | 1,50,000,00 |
| 9 | உத்திரமேரூர் | 2 | 7,50,000 |
| **மொத்தம்** | | **62** | **7,00,72,500** |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகள் வழியாக அரசு திட்டங்கள் பெற்றவர்கள்:

| வ.எண் | அரசு திட்டங்கள் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | அரசு இலவச கறவைமாடு திட்டம் | 42 |
| 2 | அரசு இலவச ஆடு வளர்ப்புத் திட்டம் | 2 |
| 3 | முதியோர் உதவித்தொகை திட்டம் | 18 |
| 4 | தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் | 24 |
| 5 | அரசு இலவச பட்டா | 38 |
| 6 | இலவச தென்னங்கன்று வழங்குதல் | 300 |
| 7 | இரண்டு பெண் குழந்தைகள் திட்டம் | 1 |
| 8 | தனிநபர் கழிவறைத் திட்டம் | 17 |
| 9 | தொகுப்பு வீடு திட்டம் | 33 |
| 10 | விதவைகள் மாதாந்திர உதவித் தொகை | 1 |
| 11 | மகளிர் மாதாந்திர உதவித் தொகை | 47 |
| **மொத்தப் பயனாளிகள்** | | **523** |

- அரசு வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் மூலம் நேரடிக்கடன் பெற்று சுயதொழில் செய்து பெண்களை வாழ்வாதாரத்தில் உயர்த்துதல்.
- பெண்களுக்கு பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிய செய்து பெண்களை சுயசார்பு நிலைக்கு உயர்த்துதல்.

## செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை | புதிய குழுக்கள் | உறுப்பினர் | மொத்த குழுக்கள் | மொத்த உறுப்பினர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | 14 | 15 | 70 | 866 | 6 | 78 | 76 | 944 |
| 2 | உத்திரமேரூர் | 15 | 25 | 81 | 1186 | 4 | 56 | 85 | 1242 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 10 | 14 | 47 | 645 | 0 | 0 | 47 | 645 |
| 4 | வாலாஜாபாத் | 6 | 16 | 50 | 623 | 6 | 74 | 56 | 697 |
| 5 | இலத்தூர் | 8 | 8 | 37 | 520 | 0 | 0 | 37 | 520 |
| 6 | மதுராந்தகம் | 6 | 7 | 36 | 547 | 0 | 0 | 36 | 547 |
| 7 | சித்தாமூர் | 7 | 7 | 19 | 269 | 5 | 78 | 24 | 347 |
| 8 | காஞ்சிபுரம் | 12 | 18 | 66 | 855 | 2 | 27 | 68 | 882 |
| 9 | திருக்கழுக்குன்றம் | 11 | 12 | 47 | 402 | 4 | 62 | 51 | 464 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 15 | 18 | 64 | 979 | 4 | 65 | 68 | 1044 |
| 11 | கடற்கரை பகுதி | 7 | 13 | 35 | 318 | 0 | 0 | 35 | 318 |
| மொத்தம் | | 111 | 153 | 552 | 7210 | 31 | 401 | 576 | 7587 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக ஒன்றியம் வாரியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | குழுக்கள் | கடன் தொகை |
|---|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | 6 | 74,00,000 |
| 2 | காஞ்சிபுரம் | 13 | 71,60,000 |
| 3 | திருப்போரூர் | 4 | 91,00,000 |
| 4 | வாலாஜாபாத் | 15 | 1,82,50,000 |
| 5 | இலத்தூர் | 3 | 30,00,000 |
| 6 | சித்தாமூர் | 4 | 82,44,500 |
| 7 | மதுராந்தகம் | 1 | 11,68,000 |
| 8 | அச்சிறுப்பாக்கம் | 14 | 1,50,000,00 |
| 9 | உத்திரமேரூர் | 2 | 7,50,000 |
| **மொத்தம்** | | **62** | **7,00,72,500** |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகள் வழியாக அரசு திட்டங்கள் பெற்றவர்கள்:

| வ.எண் | அரசு திட்டங்கள் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | அரசு இலவச கறவைமாடு திட்டம் | 42 |
| 2 | அரசு இலவச ஆடு வளர்ப்புத் திட்டம் | 2 |
| 3 | முதியோர் உதவித்தொகை திட்டம் | 18 |
| 4 | தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் | 24 |
| 5 | அரசு இலவச பட்டா | 38 |
| 6 | இலவச தென்னங்கன்று வழங்குதல் | 300 |
| 7 | இரண்டு பெண் குழந்தைகள் திட்டம் | 1 |
| 8 | தனிநபர் கழிவறைத் திட்டம் | 17 |
| 9 | தொகுப்பு வீடு திட்டம் | 33 |
| 10 | விதவைகள் மாதாந்திர உதவித் தொகை | 1 |
| 11 | மகளிர் மாதாந்திர உதவித் தொகை | 47 |
| **மொத்தப் பயனாளிகள்** | | **523** |

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்க வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டுவரும் காஞ்சிபுரம் மாவட்ட பெண்கள் மேம்பாட்டுச் சங்கம் மற்றும் செங்கல்பட்டு மதுரம் அன்னை தெரெசா நலச்சங்கம் இணைந்து 08.03.2024 அன்று அச்சிறுப்பாக்கம் மழைமலைமாதா திருத்தலத்தில் "பெண்கள் முன்னேற்றத்தில் முதலீடு செய்வோம், பெண்கள் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவோம்" என்ற தலைப்பில் அகில உலக பெண்கள் தினவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் துவக்கமாக அச்சிறுப்பாக்கம் மேம்பாலத்தின் கீழ் அமைந்துள்ள அறிவர் அம்பேத்கர் சிலை அருகிலிருந்து 2000 க்கும் மேற்பட்ட பெண்கள் இணைந்து அகில உலக பெண்கள் நாளின் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட பதாகைகளை ஏந்தி பேரணியாக மழை மலைமாதா அருட்தலத்திற்கு சென்றனர். இந்நிகழ்வை செங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு. டாக்டர் **A. நீதிநாதன்** அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார். இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்களாக அருட்பணி. முனைவர்.ஜான் போஸ்கோ (செங்கை மறைமாவட்ட ஆயரின் பொதுபதில் குரு), செல்வி.ஆமினா உசைன் (எஸ்.ஆர்.எம் மருத்துவமனை உதவி பேராசிரியர்), திருமதி.இலட்சுமி ரகு (எவரெஸ்ட் நிறுவன தொழிலதிபர்), திரு.சிவசக்தி (காவல் துணைகண்காணிப்பாளர் மதுராந்தகம்), திருமதி. தமிழ்செல்வி (காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல்நிலையம்- மேல்மருவத்தூர்), அருட்பணி.சின்னப்பர் (மழைமலைமாதா திருத்தல அதிபர்), அருட்பணி.மைக்கேல் அலெக்சாண்டர் (பங்குத்தந்தை அச்சிறுப்பாக்கம்)திருமதி.காஞ்சனா பலராமன் (ஊராட்சி மன்ற தலைவர் பள்ளிப்பேட்டை), திரு.ஜான்சன்பால் (சித்த மருத்துவர்), திருமதி.பொற்செல்வி வெங்கடேசன் (கவுன்சிலர் பள்ளிப்பேட்டை), திருமதி.பரிமளா (மத்திய உணவு மேலாண்மை நிறுவன தலைவர் (தரமணி), திருமதி.நந்தினி கரிகாலன் (பேரூராட்சி தலைவர் அச்சிறுப்பாக்கம்), திரு.சீனிவாசன் (நாபின்ஸ் நிதிநிறுவன மேலாளர்) ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். நிறுவன இயக்குநர் முனைவர்.இ.அந்தோணிராஜ் அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார். செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் என 5000 க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டு அகில உலக பெண்கள் நாளை சிறப்பித்தனர்.

## ஒன்றிய கூட்டமைப்பு கூட்டம்:

காஞ்சிபுரம் ஒன்றியத்திலுள்ள 66 மகளிர் குழுக்கள் ஒன்றிணைந்து ஒன்றிய அளவிலான கூட்டமைப்பாக செயல்பட்டு வருகின்றனர். மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஒன்றிய அளவிலான குழுக்கூட்டம் நடத்தப்பட்டு கிராம அளவிலான குழுக்களின் பிரச்சினைகள், குழுக்களை வலுப்படுத்துதல், அரசின் கடனுதவிகளை பெறுதல், போன்ற கருத்துக்கள் குழு பொறுப்பாளர்களால் பகிர்ந்துக்கொள்ளப்பட்டு குழுவின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்படுகிறது. அதன்படி 22.01.2024 அன்று ஒன்றிய குழுக்கூட்டம் நடத்தப்பட்டு குழுக்களின் செயல்பாடுகள் ஒன்றிய கூட்டமைப்பு பொறுப்பாளர்களால் வழிநடத்தப்பட்டது.

## மகளிர்குழு மானியம் பெறுதல்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் மகளிர் திட்டம் வழியாக வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள பாரதிநகர் கிராமத்தில் அன்னை மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு மகளிர் குழு தொடர்பான 3 நாள் பயிற்சி அளிக்கப்பட்டு குழுவின் செயல்பாடுகளை பார்வையிட்டு மானிய தொகையாக ரூ.10000 குழுவின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

## சி.ஆர்.டி.எஸ் – ன் சிறப்பு செயல்பாடுகள்:

### ஆண்டு பொதுக்குழு கூட்டம்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் 33வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் 17.07.2023 அன்று காலை 10.30 மணியளவில் சி.ஆர்.டி.எஸ் அறிவர் அம்பேத்கர் பயிற்சி அரங்கில் செங்கை மறைமாவட்ட ஆயர் டாக்டர் அ.நீதிநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொதுக்குழு கூட்டத்தில் சென்ற ஆண்டு அறிக்கை, வரவு செலவு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டது. நிறுவனத்தின் வளர்ச்சி பணிகள் குறித்து பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகள் பெற்று திட்டங்களை செயல்படுத்திட கலந்தாலோசிக்கப்பட்டது. சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர்.இ.அந்தோணிராஜ் அவர்கள் இப்பொதுக்குழு கூட்டத்தை சிறப்பாக வழிநடத்தினார். இக்கூட்டத்தில் செங்கை மறைமாவட்ட ஆயரின் பொதுபதில்குருவும் சி.ஆர்.டி.எஸ் நிறுவன துணைத்தலைவருமான பேரருட்தந்தை முனைவர்.ஜான்போஸ்கோ, பொருளர்தந்தை அருட்பணி. டேமியன் அருளானந்து, பங்கு அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் என மொத்தம் 92 நபர்கள் இப்பொதுக்குழு கூட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

## சர்வதேச சிறுதானிய விழிப்புணர்வு பயிற்சி:

07.08.2023 அன்று உத்திரமேரூர் பாலர்நேசன் நடுநிலைப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு சிறுதானியங்களின் அவசியம் குறித்து விழிப்புணர்வு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் கம்பு, கேழ்வரகு, சோளம், திணை, சாமை, சிவப்பு அரிசி, நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயிறு ஆகியவற்றின் பயன்கள் குறித்து தெளிவாக விளக்கப்பட்டது.

## இலவச பட்டா:

11.10.2023 அன்று காஞ்சிபுரம் ஒன்றியம் திம்மசமுத்திரம் பஞ்சாயத்தில் உள்ள கன்னடியன்குட்டை கிராமத்தில் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். இவர்கள் வீட்டுவரி, குழாய்வரி ஆகிய வரிகளை முறையாக அரசுக்கு செலுத்தி வருகின்றனர். அரசின் மூலம் குடிநீர், மின்சாரம், சிமெண்ட் சாலை வசதி ஆகிய அனைத்தும் அரசினால் வழங்கப்பட்டிருந்தும், அரசின் மூலம் இலவச வீடு மற்றும் தொகுப்புவீடு திட்டங்ளை பெற முடியவில்லை சி.ஆர்.டி.எஸ் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் குழுக்களின் மூலமாக தொடர்ந்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டதன் அடிப்படையில் கன்னடியன்குட்டை கிராமத்திலுள்ள 33 குடும்பங்களுக்கு இலவச பட்டா மாவட்ட ஆட்சியரின் மூலம் வழங்கப்பட்டது.

திருப்போரூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள சி.அர்.டி.எஸ் பணி செய்யும் கிராமங்களில் உள்ள பட்டா அல்லாத குடியிருப்புகளை கண்டறிந்து பட்டா வழங்க வேண்டி அரசுத்துறைகளுக்கு தொடர்ந்து மனு அளிக்கப்பட்டதன் அடிப்படையில் 02.02.2024 அன்று ஒரகடம், ஆலத்தூர், பையனூர், சோகண்டி, குயில்குப்பம், கரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் உள்ள 110 குடும்பங்களுக்கு அரசு சார்பாக இலவச வீட்டுமனை பட்டா ஒரு நபருக்கு 3 சென்ட் வீதம் வழங்கப்பட்டது.

## கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் மற்றும் மிச்சாங் புயல் நிவாரணம்:

20.12.2023 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் மற்றும் காரிதாஸ் இந்தியாவின் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மிச்சாங் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புயல் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள் என 450 நபர்களுக்கு புயல் நிவாரணமாக அரிசி, மளிகை பொருட்கள், போர்வை, புடவை ஆகியவை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர்.இ.அந்தோணிராஜ் அவர்களால் வழங்கப்பட்டது.





## தமிழர் திருநாள் விழா:

12.01.2024 அன்று செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் தமிழர் திருநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் செங்கை மறைமாவட்ட ஆயரின் பொதுபதில்குரு பேரருட்பணி. முனைவர்.ஜான்போஸ்கோ, குரோம்பேட்டை பங்குத்தந்தை அருட்பணி. பாக்கிய ரெஜிஸ் அவர்களும் கலந்துக்கொண்டு 100 புற்றுநோயாளர்கள், மாற்றுத்திறனாளிகள், இளம் விதவைகளுக்கான பொங்கல் பரிசுப்பொருட்கள் மற்றும் மளிகை பொருட்களுக்கான தொகுப்பை வழங்கினார்கள்.





திருப்போரூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள சி.அர்.டி.எஸ் பணி செய்யும் கிராமங்களில் உள்ள பட்டா அல்லாத குடியிருப்புகளை கண்டறிந்து பட்டா வழங்க வேண்டி அரசுத்துறைகளுக்கு தொடர்ந்து மனு அளிக்கப்பட்டதன் அடிப்படையில் 02.02.2024 அன்று ஒரகடம், ஆலத்தூர், பையனூர், சோகண்டி, குயில்குப்பம், கரும்பாக்கம் ஆகிய கிராமங்களில் உள்ள 110 குடும்பங்களுக்கு அரசு சார்பாக இலவச வீட்டுமனை பட்டா ஒரு நபருக்கு 3 செண்ட் வீதம் வழங்கப்பட்டது.

## கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் மற்றும் மிச்சாங் புயல் நிவாரணம்:

20.12.2023 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் மற்றும் காரிதாஸ் இந்தியாவின் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மிச்சாங் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புயல் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. புயலால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள் என 450 நபர்களுக்கு புயல் நிவாரணமாக அரிசி, மளிகை பொருட்கள், போர்வை, புடவை ஆகியவை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் இயக்குநர் முனைவர்.இ.அந்தோணிராஜ் அவர்களால் வழங்கப்பட்டது.

## தமிழர் திருநாள் விழா:

12.01.2024 அன்று செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் தமிழர் திருநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் செங்கை மறைமாவட்ட ஆயரின் பொதுபதில்குரு பேரருட்பணி. முனைவர்.ஜான்போஸ்கோ, குரோம்பேட்டை பங்குத்தந்தை அருட்பணி. பாக்கிய ரெஜிஸ் அவர்களும் கலந்துக்கொண்டு 100 புற்றுநோயாளர்கள், மாற்றுத்திறனாளிகள், இளம் விதவைகளுக்கான பொங்கல் பரிசுப்பொருட்கள் மற்றும் மளிகை பொருட்களுக்கான தொகுப்பை வழங்கினார்கள்.

## சிறுபான்மையினருக்கான நலத்திட்ட பயிற்சி:

23.01.2024 அன்று கிறித்தவ சிறுபான்மை மகளிருக்கான நலத்திட்டங்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு.ஆல்பர்ட், அருட்பணி.தேவசகாயம், திரு.அருள்மொழி செழியன் மற்றும் அருட்பணி. லியோ டோமினிக் அவர்கள் கலந்துக்கொண்டு கிறித்தவ மகளிர் குழுக்கள் நலவாரியம், அடையாள அட்டை, சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை, கிராமப்புற பெண்குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை, விலையில்லா தையல்மிஷின் பெறுதல், கூட்டுறவு வங்கிக்கடன் போன்றவை குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

## இந்திய தரநிர்ணய (ஹால்மார்க்) பயிற்சி:

11.09.2023 அன்று சென்னை தரமணியில் அமைந்துள்ள இந்திய தரநிர்ணய அமைவனத்தின் மூலம் சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பிரதிநிதிகளுக்கு தரநிர்ணயம் (ஹால்மார்க்) குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் தரம் குறித்த விளக்கப்பயிற்சி அளிக்கப்பட்டது.

## சிறுபான்மையினருக்கான நலத்திட்ட பயிற்சி:

23.01.2024 அன்று கிறித்தவ சிறுபான்மை மகளிருக்கான நலத்திட்டங்கள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு.ஆல்பர்ட், அருட்பணி.தேவசகாயம், திரு.அருள்மொழி செழியன் மற்றும் அருட்பணி. லியோ டோமினிக் அவர்கள் கலந்துக்கொண்டு கிறித்தவ மகளிர் குழுக்கள் நலவாரியம், அடையாள அட்டை, சிறுபான்மையினர் கல்வி உதவித்தொகை, கிராமப்புற பெண்குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை, விலையில்லா தையல்மிஷின் பெறுதல், கூட்டுறவு வங்கிக்கடன் போன்றவை குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

## இந்திய தரநிர்ணய (ஹால்மார்க்) பயிற்சி:

11.09.2023 அன்று சென்னை தரமணியில் அமைந்துள்ள இந்திய தரநிர்ணய அமைவனத்தின் மூலம் சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட பிரதிநிதிகளுக்கு தரநிர்ணயம் (ஹால்மார்க்) குறித்த ஒருநாள் கருத்தரங்கு மற்றும் தரம் குறித்த விளக்கப்பயிற்சி அளிக்கப்பட்டது.

## கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு:

கல்லூரிகளில் சமூகப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக ஆண்டுதோறும் வருவதுண்டு. இந்த ஆண்டு எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம் மற்றும் இந்துஸ்தான் கல்லூரியிலிருந்து 10 மாணவ, மாணவிகள் களப்பணி அனுபவத்திற்காக வந்திருந்து பணியாளர்களுடன் இணைந்து சமூகப்பணியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டதுடன் எஸ்.ஆர்.எம் மருத்துவக்கல்லூரி மருத்துவ முகாம் மற்றும் புற்றுநோய் விழிப்புணர்வு முகாமில் கலந்துக்கொண்டு ஏழை, எளிய மக்களின் சுகாதார நலன் காக்கும் விழிப்புணர்வை மக்களுக்கு வழங்கினார்கள்.

எஸ்.ஆர்.எம் வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திற்காக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் களப்பகுதியான காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மேல்மணப்பாக்கம் கிராமத்திற்கு சென்று அங்குள்ள தோட்டப்பயிர்கள் பராமரிப்பு, கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டு கிராம மக்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், பள்ளி மாணவர்களிடையே இயற்கை விவசாயம், கால்நடைகள் வளர்ப்பின் முக்கியத்துவம், சுழற்சி முறையில் கழிவுகளை உரமாக்குதல், செயற்கை உரங்களின் பின்விளைவுகள், நெகிழியின் தீமைகள் குறித்து குறும்படம் வாயிலாக கருத்துக்களை விளக்கினார்கள். கிராமப்புற விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி இயற்கையை பேணிகாப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தி தங்கள் பயிற்சி அனுபவத்தை பகிர்ந்துக்கொண்டனர்.

GB MEETING



# சி.ஆர்.டி.எஸ் நிர்வாக குழு

| வ.எண் | பெயர் | முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1 | மேதகு.ஆயர்.நீதிநாதன் | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603101 | நிறுவன தலைவர் |
| 2 | அருட்பணி.ஜான்போஸ்கோ | செங்கல்பட்டு மறைமாவட்ட பொது பதில் குரு, ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603101 | துணைத் தலைவர் |
| 3 | அருட்பணி.ஜார்ஜ் ஸ்டீபன் | செங்கல்பட்டு மறைமாவட்ட பொருளாளர் ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603101 | பொருளாளர் |
| 4 | அருட்பணி.அந்தோணிராஜ் | சி.ஆர்.டி.எஸ் இயக்குநர். செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம், திம்மாவரம், செங்கல்பட்டு 603101 | செயலாளர் |
| 5 | திருமதி.சின்னம்மாள் | ஒழையூர் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் | உறுப்பினர் |
| 6 | திருமதி.ஸ்டெல்லா | நெ.14/2, செல்லியம்மன் தேரடி தெரு, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் 603306 | உறுப்பினர் |
| 7 | அருட்பணி.மரிய அன்பு | புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய பங்குத்தந்தை, நெ,2/110, மாதாகோவில் தெரு, மதுவந்தாங்கல், காஞ்சிபுரம் மாவட்டம் – 603204 | உறுப்பினர் |
| 8 | சகோதரி. பிரியா | புனித மரியாள் கன்னிமடம், செங்கல்பட்டு– 603101 | உறுப்பினர் |
| 9 | திரு.அந்தோணிதாஸ் | நெ.55,விப்பேடு, மேல்கதிர்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் – 603502 | உறுப்பினர் |
| 10 | திருமதி.கீதா | நெ.584/3, பாலமுருகன் தெரு, இருங்குன்றபள்ளி, செங்கல்பட்டு மாவட்டம் – 603002 | உறுப்பினர் |
| 11 | திரு.பெஞ்சமின் | நெ.74, புலிப்பாக்கம், தந்தை பெரியார் தெரு, செங்கல்பட்டு – 603002 | உறுப்பினர் |

## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் 5 ஆண்டு (2019 – 2024) சாதனைகள்– மீள்பார்வை

- சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கென்று அலுவலக பயன்பாடுகளுக்காக புதிய வாகனம் வாங்கப்பட்டுள்ளது. திம்மாவரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு வரும் வழியானது கடந்த 2022 ஆம் ஆண்டில் புதியதாக சிமெண்ட சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- திம்மாவரம் தேசிய நெடுஞ்சாலையில் பணியாளர்கள் மற்றும் இலக்கு மக்கள் அலுவலகம் வந்துச்செல்ல ஏதுவாக வழித்தடம் ஏற்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.
- சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் கட்டிட வரைபடமானது காட்டாங்குளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்து பெறப்பட்டுள்ளது.
- கடந்த 5 ஆண்டுகளில் புதியதாக 175 மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டு 2347 உறுப்பினர்கள் புதியதாக சி.ஆர்.டி.எஸ் குழுக்களில் இணைந்துள்ளனர்.
- சி.ஆர்.டி.எஸ் அலுவலக கட்டடிடத்தின் சிட்டா, அடங்கல் ஆகியவற்றின் ஒப்புதல் படிவம் பெறப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று பரவலில் அலை 1 மற்றும் 2ல் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள 36,289 குடும்பங்களுக்கு நிவாரண உதவி செய்யப்பட்டுள்ளது.
- கடந்த 5 ஆண்டுகளில் நாபின்ஸ் நிதிநிறுவனம் வழியாக தொழில் தொடங்கும் நோக்கத்திற்காக மொத்தம் 543 குழுக்களுக்கு ரூ.22,41,79,000 (இருபத்து இரண்டு கோடியே நாற்பத்தொறு இலட்சத்து எழுபத்தொன்பது ஆயிரம்) கடனுதவி பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- கடந்த 2021 மற்றும் 2023ல் ஏற்பட்ட புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவி மொத்தம் 786 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- சி.ஆர்.டி.எஸ் நிறுவன வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருகின்ற குழுக்களுக்கு தொழில் தொடங்கும் நோக்கத்தில் கடந்த 5 ஆண்டுகளில் வங்கிகளின் வழியாக நேரடிக்கடன் 284 குழுக்களுக்கு மொத்தம் ரூ.20,86,71,500 (இருபது கோடியே எண்பத்தாறு இலட்சத்து எழுபத்தோராயிரத்து ஐநூறு) பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- காரிதாஸ் இந்தியாவின் மாற்றுத்திறனாளிகளுக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் வழியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 85 கிராமங்களில் 986 மாற்றுத்திறனாளர்களை உள்ளடக்கிய 85 மாற்றுத்திறனாளி சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவசான்றிதழ் மற்றும் மாற்றுத்திறனாளி அடையாள அட்டை மொத்தம் 629 மாற்றுத்திறனாளிகளுக்கு விண்ணப்பித்து பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- தேசிய அளவிலான மாற்றுத்திறனாளி அடையாள அட்டை 752 மாற்றுத்திறனாளர்களுக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் 171 நபர்களுக்கு பெற்றுத்தரப்பட்டள்ளது.
- அனைவருக்கும் கல்வி என்ற இலக்கில் 58 மாற்றுத்திறனாளி குழந்தைகள் அரசு பள்ளிகளில் சேர்க்கப்ட்டு இடைநிற்றல் இன்றி கல்வி கற்று வருகின்றனர்.
- மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர அரசின் உதவித்தொகை 266 நபர்களுக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தில் 311 நபர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.
- மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பராமரிப்பு உதவித்தொகை 114 பாதுகாவலர்களுக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான தனிநபர் கழிவறை திட்டத்தில் விண்ணப்பித்து 56 மாற்றுத்திறனாளிக்கு ஏதுவான கழிவறை வசதி செய்து தரப்பட்டுள்ளது.
- சுயதொழில் தொடங்கும் நோக்கத்திற்காக வங்கி, அரசு மற்றும் அரசு சாரா நிதிநிறுவனங்களின் மூலம் கடனுதவித்தொகை 205 மாற்றுத்திறனாளிகளுக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது. இதன்மூலம் மேற்கண்ட மாற்றுத்திறனாளிகள் தொழில் முனைவோராக மாறியுள்ளனர்.

## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் 5 ஆண்டு (2019 – 2024) சாதனைகள்– மீள்பார்வை....

- அரசின் பசுமை வீடுகட்டும் திட்டத்தில் விண்ணப்பிக்கப்பட்டு 30 மாற்றுத்திறனாளிகள் பாதுகாப்பான சொந்த வீடுகளில் வசித்து வருகின்றனர்.
- அரசின் மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரம் 42 மாற்றுத்திறனாளிகளுக்கு பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- 10 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச இரயில் மற்றும் பேருந்து பயண சலுகை அட்டை பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- 19 மாற்றுத்திறனாளி இளைஞர், இளம் பெண்கள் வாழ்வாதார திறன்பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்று வேலை செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர்.
- 2 ஒன்றிய அளவிலான மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு குழுக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது.
- பள்ளி, கல்லூரி பயிலும் 25 ஏழை மாணவ மாணவிகளுக்கு சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- இயற்கையை பேணிக்காக்கும் நோக்கத்துடன் சி.ஆர்.டி.எஸ் வளாகம் முழுவதும் மரக்கன்றுகள் நடப்பட்டு சுற்றுசூழல் பாதுகாக்கப்பட்டுள்ளது.
- சி.ஆர்.டி.எஸ் பரிந்துரையின்படி ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் ஓய்வு பெற்ற பணியாளர் சங்கத்தின் மூலம் காஞ்சிபுரம் ஒன்றியத்திலுள்ள விப்பேடு கிராமத்தில் கணவனால் கைவிடப்பட்ட 2 மகளிருக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
- கோல்பிங் திட்டத்தின் வழியாக கடந்த 5 ஆண்டுகளில் குழு வருவாய் பெருக்குத்திட்டம் மூலம் 20 உறுப்பினர்களுக்கு ரூ.2,00,000, கறவைமாடு வளர்ப்புத்திட்டம் வழியாக 37 உறுப்பினர்களுக்கு ரூ.4,75,000 வீடுகட்டும் திட்டம் மூலம் 7 உறுப்பினர்களுக்கு ரூ.3,50,000 தொழிற்பயிற்சி திட்டம் மூலம் 28 நபர்களுக்கு ரூ.4,10,000, தனிநபர் கழிவறைத்திட்டம் மூலம் 50 உறுப்பினர்களுக்கு 7,50,000 குழுசுழல்நிதி திட்டத்தின் வழியாக 31 கோல்பிங் குழுக்களுக்கு ரூ.22,40,000 ஆக மொத்தம் மேற்கண்ட கோல்பிங் திட்டங்களின் வழியாக மொத்தம் 173 நபர்களுக்கு ரூ.4,42,05,000.00 (நான்கு கோடியே நாற்பத்து இரண்டு இலட்சத்து ஐயாயிரம்) கடனுதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் சி.ஆர்.டி.எஸ் பணி செய்யும் கிராமங்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு சென்று பிளாஸ்டிக் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டு நெகிழியற்ற சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.
- உலக வெப்பமயமாதலை தடுத்து, எதிர்காலத்தில் பாதுகாப்பான இயற்கை சூழலை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் களப்பகுதிகளில் கடந்த 5 ஆண்டுகளில் 4358
- மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது. மேலும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கவும், புற்றுநோயற்ற சமுதாயத்தை உருவாக்கவும், வீட்டுத்தோட்டம் அமைக்கவும் 85 நபர்களுக்கு தோட்டப்பயிர்களுக்கான விதைகள்
- வழங்கப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டம், ஒரகடம் கிராமத்திலுள்ள 25 பழங்குடியின மக்களுக்கு தலா 3 சென்ட் வீதம் பட்டா நிலம் அரசிடம் பெறப்பட்டு சி.ஆர்.டி.எஸ் நிறுவன வீடுகட்டும் திட்டத்தின் வழியாக பாதுகாப்பான வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளது. மேலும் கடந்த 5 ஆண்டுகளில் 143 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா அரசிடம் விண்ணப்பித்து பெற்றுத்தரப்பட்டுள்ளது.
- சி.ஆர்.டி.எஸ் மகளிர் குழு உறுப்பினர்கள் 216 பேருக்கு தலைமைத்துவ பயிற்சி, தையல்பயிற்சி, திறன்வளர்ப்பு பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு 132 நபர்கள் சுயமாக தொழில்செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர்.
- செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் மூலம் 2021 உள்ளாட்சி மன்ற தேர்தல் குறித்த விழிப்புணர்வு பயிற்சி கூட்டங்கள் நடத்தப்பட்டதன் அடிப்படையில் 1மாவட்ட கவுன்சிலர், 2 ஒன்றிய கவுன்சிலர்கள், 11 ஊராட்சி மன்ற தலைவர்கள், 55 வார்டு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.